03.06.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொப்பரைத் தேங்காய் கொள்முதலுக்கு 15-ஆம் தேதி முதல் தனி மையங்கள்



கொப்பரைத் தேங்காய்களை கொள்முதல் செய்வதற்கான தனி மையங்கள் வரும் 15 ஆம் தேதி முதல் செயல்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

மேலும், தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் கொப்பரைத் தேங்காயை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து, தமிழக அரசு வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:-

தமிழகத்தில் சுமார் 4 லட்சத்து 28 ஆயிரத்து ஹெக்டேர் பரப்பில் தென்னை பயிரிடப்பட்டு வருகிறது.

இப்போது சந்தையில் கொப்பரை தேங்காய் விலை கிலோ ரூ.50-க்கு குறைவாக உள்ளதால் அதனை அரசே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்னை விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். இந்தக் கோரிக்கையை ஏற்று, கொப்பரைத் தேங்காயை கொள்முதல் செய்வது தொடர்பான ஆய்வுக் கூட்டம், முதல்வர் ஜெயலலிதா தலைமையில் தலைமைச் செயலகக்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

கொப்பரைத் தேங்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும், கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், சிவகங்கை, ராமநாதபுரம், வேலூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் மூலம் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்படும்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வழியாக நேரடி கொள்முதல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு கொள்முதல் தொடங்கும்.

அரவைக் கொப்பரை கிலோவுக்கு ரூ.59.50, பந்து கொப்பரை கிலோவுக்கு ரூ.62.40 என்ற ஆதார விலையின் அடிப்படையில் விவசாயிகளிடம் இருந்து கொப்பரைத் தேங்காய் நேரடியாக கொள்முதல் செய்யப்படும். ரூ.10 கோடி மதிப்பில் இந்த கொள்முதல் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அரசு சார்பில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

வரும் 15 முதல் செயல்படும்: கொள்முதல் செய்யப்படும் கொப்பரைத் தேங்காய்களுக்கான தொகை விவசாயிகளின் விருப்பத்துக்கேற்ப அவர்களது வங்கிக் கணக்கில் மின்னணு நிதி பரிமாற்றம் (இ.சி.எஸ்.,) மூலமாகவோ, கோடிட்ட காசோலை வழியாகவோ உடனடியாக வழங்கப்படும். நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் கொப்பரைத் தேங்காய்களுக்கு விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய ஒரு சதவீத சந்தைக் கட்டணம் ரத்து செய்யப்படும்.

தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம் கேட்டுக் கொண்டபடி, கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரைத் தேங்காயை விற்பனை செய்யும்போது, மாநில அரசுக்குச் செலுத்த வேண்டிய 5 சதவீத மதிப்புகூட்டு வரி முற்றிலுமாக ரத்து செய்யப்படும்.

நேரடி கொள்முதல் நிலையங்கள் வரும் 15 ஆம் தேதி முதல் செயல்படும். கொப்பரைத் தேங்காய்கள் அடுத்த ஆறு மாதங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

**தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றம்**

"சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கையில் கொப்பரை தேங்காய் விலை குறையும் போதெல்லாம் விவசாயிகளிடம் இருந்து கொப்பரையை வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாக்குறுதியை அளித்திருந்தேன். இப்போது கொப்பரைத் தேங்காய் விலை குறைந்துள்ளதால், அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன' என்று தனது அறிக்கையில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## ஒட்டன்சத்திரம் சந்தையில் மலை பீன்ஸ் விலை உயர்வு

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் மலை பீன்ஸ் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தைக்கு தக்காளி, முருங்கைக்காய், வெண்டைக்காய், சுரைக்காய், பூசணிக்காய், காலிபிளவர் உள்ளிட்ட காய்கறிகள் தினசரி விற்பனைக்கு வருகின்றன.

கடந்த சில மாதங்களாக வெயிலின் தாக்கம் அதிகம் இருந்ததால் காய்கறிகள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதே போல தரைப்பகுதியில் விளையக்கூடிய பீன்ஸ் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இதனால் அவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்து வந்தது. தற்போது வடகாடு, பெத்தேல்புரம், பெரியூர், தாண்டிக்குடி, கே.சி.பட்டி, பண்ணைக்காடு, ஆடலூர், பன்றிமலை உள்ளிட்ட மலைப்பகுதியில் இருந்து பீன்ஸ் விற்பனைக்கு வருகிறது.

மிக குறைந்த அளவே விற்பனைக்கு வரும் பீன்ஸை வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு கொள்முதல் செய்கின்றனர்.

இதனால் வியாழக்கிழமையன்று ஒரு கிலோ மலை பீன்ஸ் ரூ.90 முதல் 110 வரை விற்பனையானது. அதே போல சின்னவெங்காயம் கிலோவிற்கு ரூ.3 முதல் 5 வரை உயர்ந்து ரூ.45-க்கும்,முருங்கைக்காய் கிலோ ரூ.35-க்கு விற்பனையானது.

**சுற்றுலாப் பயணிகளை கவரும் கல்லாறு பழப் பண்ணை**

சுற்றுலா மையங்களை அதிகம் கொண்ட மேட்டுப்பாளையம் பகுதியில், கல்லாறு அரசு தோட்டக்கலைப் பண்ணை, ஆண்டு முழுவதும் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் மையமாக திகழ்ந்து வருகிறது.

மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்லும் பாதையில் நீலகிரி மலையடிவாரத்தில் முதல் கொண்டை ஊசி வளைவிலிருந்து 1 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது கல்லாறு அரசு தோட்டக் கலைப் பண்ணை. 1900-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பண்ணையில் எலுமிச்சை, கொய்யா, மாதுளை, பலா, பன்னீர்கொய்யா ஆகிய பயிர்களுடன், மலைப் பிரதேசங்களில் மட்டும் விளையக்கூடிய வாசனை திரவிய பயிர்களான கிராம்பு, ஜாதிக்காய், மிளகு, வெங்கப்பட்டை ஆகியவை நன்கு விளைகின்றன. மேலும் பழங்களின் அரசி எனப்படும் மங்குஸ்தான், துரியன், லிச்சி, ரம்பூட்டான், லாங்-சாட், முட்டைபழம் ஆகிய பழ மரங்களும் இங்கு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. தற்போது பழாப்பழ சீசன் துவங்கியுள்ள நிலையில், இங்குள்ள 50-க்கும் மேற்பட்ட மரங்களில் பலாப்பழம் காய்த்து தொங்குகிறது. உயர் விளைச்சல் தரக்கூடிய வேலிப் பலா, பர்லியாறு பலா, கல்லாறு பலா, சிங்கப்பூர் பலா என அனைத்து வகை பழங்களும் காய்த்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன.

பண்ணையிலுள்ள இப்பழங்களின் வாசனைக்கு, குரங்குகள் மட்டுமின்றி, இரவு நேரங்களில் யானைகளும் கூட்டம், கூட்டமாக வந்து பழங்களைத் தின்று செல்கின்றன.

தற்போது இப்பண்ணையில் பலாப்பழம் கிலோ ரூ. 10 என நேரிடையாக விற்பனை செய்யப்பட்டு வருவதால், பொதுமக்களும், வியாபாரிகளும் போட்டிப் போட்டிக் கொண்டு வாங்கி செல்கின்றனர். காலை 9 முதல் மாலை 4.30 மணிவரை

இயங்கிவரும் இப்பழப் பண்ணையில், நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ. 15-ம், சிறுவர்களுக்கு ரூ. 10-ம் வசூலிக்கப்படுகிறது.

**மக்காச்சோள மகசூல் பாதிப்பு: விஞ்ஞானிகள் ஆய்வு**

தாராபுரம் அருகே மக்காச்சோள மகசூல் பாதிக்கப்பட்ட பகுதிகளை வேளாண் விஞ்ஞானிகள் வியாழக்கிழமை நேரில் ஆய்வு செய்தனர்.

தாராபுரம் பகுதியில் பழைய மற்றும் புதிய அமராவதி ஆயக்கட்டில் 18 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இதில், நெல், கரும்பு, புகையிலை போன்ற பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வந்தனர்.

இந்நிலையில், அண்மைக் காலமாகக் குறைந்த காலத்தில் அதிக விளைச்சல் தரும் மக்காச்சோள சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர். மக்காச்சோளத்துக்கு என அரசு சார்பில் எந்த ஒரு சான்று விதையும் வழங்கப்படாத நிலையில் இப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு மக்காச்சோள விதைகளை விவசாயிகளின் வீட்டுக்கே நேரில் சென்று வழங்கி வந்தனர்.

இந்த விதைகள் மூலமாக மக்காச்சோளம் சாகுபடி செய்த அலங்கியம் பகுதி விவசாயிகளின் தோட்டங்களில் மக்காச்சோளப் பயிர் விளைந்த நிலையில், கதிர்கள் முற்றாமல் கருகிப் போய்விட்டன. இதனால் ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, வேளாண் துறையினருக்குத் தகவல் அளிக்கப்பட்ட நிலையில் திண்டுக்கல் மாவட்டம், வாகரையில் உள்ள மக்காச்சோள ஆய்வு மையத் தலைவர் சேதுராமன் மற்றும் விஞ்ஞானிகள் துர்க்கையண்ணன், இளையரசு, வினோதனா ஆகியோர் அடங்கிய குழுவினர் அலங்கியம் பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளின் தோட்டத்தில் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வறிக்கையை வேளாண் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த பிறகு விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வேளாண் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## உழவர் சந்தையில் ரூ.1.19 கோடிக்கு காய்கறி விற்பனை

தாராபுரம் உழவர் சந்தையில் கடந்த மே மாதத்தில் ரூ. 1 கோடியே 19 லட்சம் மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து உழவர் சந்தை நிர்வாகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

இந்த உழவர் சந்தைக்கு தாராபுரம், குண்டடம், மூலனூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்குக் கொண்டு வருகின்றனர். அதன்படி கடந்த மே மாதத்தில் 4 லட்சத்து 12 ஆயிரத்து 900 கிலோ காய்கறிகளை 3 ஆயிரத்து 584 விவசாயிகள் விற்பனைக்காகக் கொண்டுவந்திருந்தனர். காய்கறிகளை 59 ஆயிரத்து 155 நுகர்வோர்கள் வாங்கிப் பயன்பெற்றுள்ளனர். அதன் மொத்த மதிப்பு ரூ. 1 கோடியே 19 லட்சத்து 31 ஆயிரம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## களை கட்டிய கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை: வியாபாரிகள் மகிழ்ச்சி

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் மாடுகள் விற்பனை மீண்டும் களை கட்டியது.

ஈரோடு கருங்கல்பாளையம் பகுதியில் வாரந்தோறும் வியாழக்கிழமை மாட்டுச் சந்தை நடைபெறுவது வழக்கம். இந்த மாட்டுச் சந்தைக்கு ஆந்திரம், தெலங்கானா, கர்நாடகம், மகாராஷ்டிரம், கோவா போன்ற மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் அதிக அளவில் வந்து மாடுகளை வாங்கிச் செல்வது வழக்கம்.

இந்நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற சந்தைக்கு மாடுகளை விற்பனை செய்ய ஈரோடு, நாமக்கல், சேலம், திருப்பூர், கோவை, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் வந்திருந்தனர். வழக்கத்துக்கு மாறாக பசுக்கள், எருமை மாடுகள், கன்றுகள் விற்பனைக்கு வந்திருந்தன.

இதுகுறித்து மாட்டுச் சந்தை மேலாளர் முருகன் கூறுகையில், "வியாழக்கிழமை அதிகாலை முதலே மாடுகள் விற்பனைக்கு வரத் தொடங்கின. மாடுகளை

வாங்குவதற்கு ஆந்திரம், தெலங்கானா, மகாராஷ்டிரம், கர்நாடகம் போன்ற வெளிமாநில வியாபாரிகள் புதன்கிழமை இரவில் இருந்தே வரத் தொடங்கி விட்டனர்.

இந்தச் சந்தையில் 550 பசுக்கள், 500 எருமைகள், 350 கன்றுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.

இதில் பசுமாடுகள் ரூ.16 ஆயிரம் முதல் ரூ.32 ஆயிரம் வரையிலும், எருமை ரூ.18 ஆயிரம் முதல் ரூ.34 ஆயிரம் வரையிலும், கன்றுகள் ரூ.1,000 முதல் ரூ.6,000 வரையிலும் விற்பனையாகின' என்றார்.

## ஒரே நாளில் அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்தால் தகவல் தெரிவிக்கலாம்: ஆட்சியர்

திருவாரூர் மாவட்டத்தில் ஏதேனும் பகுதியில் ஒரே நாளில் அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்தால் தகவல் தெரிவிக்கலாம் என்று ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார்.

மன்னார்குடியை அடுத்த வடுவூர் சோதனைச் சாவடி அருகே பறவைக் காய்ச்சல் நோய் ஒழிப்பு மருந்து வாகனங்களில் தெளிப்பதைப் பார்வையிட்டு ஆட்சியர் கூறியது:

கர்நாடக மாநிலம், பிடார் மாவட்டம், ஹம்நாபாத் தாலுகா மோல்கேரா கிராமத்தில் அண்மையில் பறவைக் காய்ச்சல் நோய் பரவி ஆயிரக்கணக்கான கோழிகள் இறந்தன. பறவைக் காய்ச்சல் நோயால் மனிதர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் சுமார் 2 லட்சம் உயிர்க் கோழிகள் கொல்லப்பட்டு, நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நோய் திருவாரூர் மாவட்டத்தில் பரவாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்திலிருந்து நோய் பரவ வாய்ப்புள்ளதால் அங்கிருந்து வாகனங்களில் வரும் கோழிகள், முட்டைகள், தீவனங்கள் மற்றும் உபகரணங்கள் இங்கு கொண்டு வர தடை செய்யப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டத்தில் சோதனைச்சாவடிகளில் கோழிகள், தீவனங்கள் ஏற்றி வரும் வாகனங்களில் கிருமிநாசினி மருந்து தெளிக்கப்படுகிறது. மாவட்டத்தில் அசாதாரண வகையில்

ஒன்றுக்கும் மேற்பட்ட கோழிகள் ஒரே நாளில் இறந்தால், பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்கள் உடனே அருகிலுள்ள கால்நடை மருத்துவர்களிடமோ, கால்நடை நிலையத்திலோ தகவல் தெரிவிக்கலாம் என்றார் மதிவாணன்.

தொடர்ந்து, வடக்குவலத்தெரு பகுதியில் மக்களிடம் குடும்ப அட்டைக்கு குடிமைப் பொருள்கள் சரியான முறையில் வழங்கப்படுகிறதா என்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அவருடன், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) தங்கவேல், கோட்டாட்சியர் செல்வசுரபி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## தேசிய பாரம்பரிய நெல் திருவிழா நாளை தொடக்கம்

திருவாரூர் மாவட்டம், ஆதிரெங்கம் இயற்கை விவசாய பண்ணையில் தேசிய அளவிலான 10 ஆவது ஆண்டு நெல் திருவிழா சனிக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகிறது.

திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் இயற்கை விவசாய பண்ணையில் நடைபெறும் இவ்விழாவுக்கு திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ந. மார்கண்டன் தலைமை வகிக்கிறார்.

கிரியேட் தலைவர் பி. துரைசிங்கம், தமிழக இயற்கை உழவர் இயக்க மாநிலத் தலைவர் சிக்கல் அ. அம்பலவாணன், ஆதிரெங்கம் ஊராட்சித் தலைவர் அப்துல் முனாப் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பாரம்பரிய நெல் கண்காட்சியை இயற்கை மருத்துவர் கு. சிவராமன் தொடங்கிவைக்கிறார். நெல் திருவிழாவின் நோக்கம் குறித்து நமது நெல்லைக் காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன் விளக்கிப் பேசுகிறார்.

விழாவை நபார்டு வங்கியின் முதன்மை பொது மேலாளர் நாகூர் அலி ஜின்னா தொடங்கி வைக்கிறார். காலஞ்சென்ற இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் குறித்த ஆவண குறும்படத்தை கோவை வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி வெளியிடுகிறார்.

பாரம்பரிய நெல் விதைகளை தமிழக அரசின் வேளாண்மைத்துறை இயக்குநர் மு. ராஜேந்திரன் வழங்கி விழா பேருரையாற்றுகிறார். சிறந்த இயற்கை

விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருதை திருவாரூர் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் வழங்குகிறார்.

வேளாண்மைக்கு அரசின் திட்டங்கள் குறித்து, மாநில திட்டக் குழுவின் வேளாண்மை திட்டக் குழுமத் தலைவர் கே.ஆர். ஜெயமோகன் விளக்கிப் பேசுகிறார்.

விதை முகூர்த்தத்தை நமது நெல்லைக் காப்போம் தேசிய ஒருங்கிணைப்பாளர் எஸ். உஷாகுமாரி தொடங்கி வைக்கிறார். இயற்கை வேளாண்மை குறித்த கையேட்டினை தெலங்கானா மாநில உழவர் போராளி பேராசிரியர் நரசிம்மரெட்டி வெளியிடுகிறார்.

குழந்தைகளுக்கான உணவு வகைகள் குறித்து ஜி.டி. பவுண்டேஷன் நிர்வாக அறங்காவலர் குழந்தைகள் மருத்துவர் டி. ராஜா, சுற்றுச்சூழல் குறித்து மருத்துவர் வீ. ரகுநாதன் ஆகியோர் பேசுகின்றனர்.

இரண்டாவது நாள் ஞாயிற்றுக்கிழமை நபார்டு திட்டங்கள், பாரம்பரிய நெல்களின் மருத்துவ குணங்கள், இயற்கை வேளாண்மையின் அவசியம், விளைநிலங்கள், நீர் பாதுகாப்பு, இயற்கை வேளாண்மையில் பூச்சிக் கட்டுப்பாடு, இயற்கை வேளாண்மை சான்று பெறுதல், பாரம்பரிய கால்நடைகளின் முக்கியத்துவம், உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்குவதன் அவசியம், இயற்கை விளைபொருள் விற்பனை, மண்வளமும், மேம்பாடும் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விவசாயிகள், விவசாய அறிஞர்கள், நிபுணர்கள் பங்கேற்கும் சிறப்பு அமர்வுகள் நடைபெறுகிறது.

நிறைவு விழாவுக்கு கிரியேட் நிர்வாக அறங்காவலர் ஆர். பொன்னம்பலம் தலைமையில், கிரியேட் தலைவர் பி. துரைசிங்கம் முன்னிலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, சட்டப்பேரவை உறுப்பினர் பி. ஆடலரசன், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் கோ. பழனிச்சாமி, காந்தி கருணை மருத்துவ மைய நிறுவனர் டாக்டர் பா.சு. மணி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

விழாவில் கர்நாடகம், தெலங்கானா, உத்தரகண்ட், ஒடிசா, கேரளம் உள்ளிட்ட வெளி மாநில விவசாயிகளும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பங்கேற்கின்றனர்.

## மானிய விலையில் நடவு இயந்திரம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2015-16, வேளாண் துறை சார்பில் விவசாயிக்கு மானிய விலையில் நடவு இயந்திரம் வழங்கப்பட்டது.

சின்னசேலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியின்போது ஆட்சியர் எம்.லட்சுமி கல்லாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜெயக்குமாருக்கு ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள நெல் நடவு இயந்திரத்தை ரூ.94 ஆயிரம் மானியத்தில் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) செல்வசேகர், சின்னசேலம் வட்டாட்சியர் கமலம், வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கூடுதல் மழை எதிர்பார்க்கலாம்

புதுடில்லி: வழக்கத்தை விட வரவிருக்கும் பருவ மழை நாட்டில் நன்றாக இருக்கும் என்றும் , சில பகுதிகளில் 107, 108, 113 சதவீகத்திற்கும் மேலாக மழை பெய்யும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை: இன்னும் 4 அல்லது 5 நாட்களில் பருவமழை துவங்கும். இந்தாண்டு சராசரிக்கும் அதிகமாக பருவமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நாடு முழுவதும் இந்தாண்டு சராசரியாகவும் அதிகமாகவும் மழை பெய்ய 96 சதவீதம் வாய்ப்புண்டு. நாட்டின் பல பகுதிகளில் 107 சதவீகத்திற்கும் மேலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. ஜூன் செப்டம்பர் மாதங்களில் பருவமழை வழக்கத்தை விட அதிகமாக இருக்க வாய்ப்புண்டு. ஜூலை மாதம் இந்தியா முழுவதும் நாடு முழுவதும் மழை 107 சதவீதம் பெய்யும். ஆகஸ்ட் மாதம் 104 சதவீதமாக இருக்கும். வட மேற்கு இந்தியா 108 சதவீதமும்,

தெற்கு மற்றும் மத்திய இந்தியா, 113 சதவீதமும், வடகிழக்கு பகுதியில் 94 சதவீதம் மழை பெய்யும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**நிலத்தடி நீர் ஆதாரத்தை நம்பி குறுவை சாகுபடி துவக்கம்**

தஞ்சாவூர்: மேட்டூரில், இந்தாண்டு தண்ணீர் இல்லாததால், டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆதாரத்தை நம்பி குறுவை பருவ நெல் சாகுபடி பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

மேட்டூர் அணையில், குறுவை பருவத்தில் தொடர்ந்து ஐந்தாம் ஆண்டாக போதுமான அளவுக்கு தண்ணீர் இல்லை. தென் மேற்கு பருவ மழையும், ஜூன் 2வது வாரத்தில் தான் துவங்கும் எனக் கூறப்படுவதால், மேட்டூர் அணை ஜூன், 12ம் தேதி திறப்பதற்கான வாய்ப்பில்லை. இதற்காக, தமிழக அரசும் தொகுப்பு திட்டத்தை அறிவித்துள்ளன. எனவே, டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆதாரத்துக்கு வாய்ப்புள்ள பகுதிகளில் மட்டுமே குறுவை பருவ நெல் சாகுபடி மேற்கொள்ளக்கூடிய நிலை உள்ளது.இந்தாண்டு, குறுவை சாகுபடி இயல்பான அளவை எட்ட வாய்ப்பில்லை என வேளாண் வல்லுனர்கள் தெரிவித்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில், 30 ஆயிரம் எக்டேரிலும், திருவாரூர் மாவட்டத்தில், 28 ஆயிரம் எக்டேரிலும், நாகை மாவட்டத்தில், 20 ஆயிரம் முதல், 25 ஆயிரம் எக்டேரிலும் என மொத்தம் ஏறத்தாழ, 80 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி எதிர்பார்க்கப்படுவதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், அண்மையில் பெய்த தொடர் மழையால் வயல்களில் தேங்கியுள்ள தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்து வருகின்றனர். மேலும், நிலத்தடி நீர் ஆதாரமும், ஆழ்குழாய் மோட்டார் வசதியும் உடைய விவசாயிகள், குறுவை நெல் சாகுபடிக்கான நாற்றங்கால் நடுதலையும், நாற்று நடும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறத்தாழ, 7,500 எக்டேரிலும், நாகை மாவட்டத்தில், 4,000 எக்டேரிலும் நடவு செய்யப்பட்டுள்ளது.திருவாரூர் மாவட்டத்தில், தற்போது தான் குறுவை சாகுபடி பணிகள் துவங்கப்பட்டுள்ளன. டெல்டா மாவட்டங்களில், குறுவை சாகுபடிப் பரப்பளவு குறைந்து வரும் நிலையில், நிகழாண்டும் இயல்பான

அளவை மட்டுமல்லாமல், கடந்த ஆண்டு அளவையும் எட்டுமா என்ற சந்தேகம் நிலவுகிறது.

## ஒன்றியத்தில் நடவு செய்ய 62 ஆயிரம் மரக்கன்றுகள் தயார்

திருத்தணி: வனத் துறை சார்பில், 13 வகையான, 62 ஆயிரம் மரக்கன்றுகள் ஒன்றியத்தில் நடவு செய்ய, தயார் நிலையில் உள்ளன.

திருத்தணி வனத் துறையினர், குமாரகுப்பம் பகுதியில் நாவல், பாதாம், நீர்மருது, ஆயா, புங்கன், வேம்பு, பலா, புளியன், தேக்கு, செம்மரம், பூவரசு உள்பட 13 வகையான மரக் கன்றுகள் நடவு செய்வதற்கு தயார் நிலையில் வைத்து பராமரித்து வருகின்றனர்.

இதை, நேற்று முன்தினம், ஆட்சியர் சுந்தரவல்லி பார்வையிட்டார். இந்த மரக்கன்றுகள், திருத்தணி தாலுகாவில் நடவு செய்யப்பட உள்ளது.

இதுகுறித்து, திருத்தணி வனத் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'வனத் துறை சார்பில், 5,500 மரக்கன்றுகள், வனத் துறைக்கு சொந்தமான இடங்களில் நடப்படும். மீதமுள்ள மரக்கன்றுகள் ஊரக வளர்ச்சி முகாமை திட்டத்தின் கீழ், ஒன்றிய நிர்வாகம் மூலம் நடவு செய்யப்படும். மரக்கன்றுகளை பிளாஸ்டிக் கவரில், தரமான மண் வளத்தில் வைத்து பாதுகாத்து
வருகிறோம்' என்றார்.

## விவசாயிகள் மகிழ்ச்சி; சந்தை வியாபாரிகள் அவதி

புன்செய்புளியம்பட்டி: புன்செய்புளியம்பட்டி பகுதியில், நேற்று மாலை கனமழை பெய்தது. புன்செய்புளியம்பட்டியில் கடந்த இரண்டு மாதங்களாக நிலவிய கோடை வெயிலால், பகலில் மட்டுமின்றி, இரவிலும் கடும் உஷ்ணத்தால் மக்கள் தவித்தனர். இந்நிலையில், மாலை, 4 மணிக்கு தொடங்கி, 5 மணி வரை கனமழை பெய்தது. இதனால், கோடை உழவு செய்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். நேற்று நடந்த வாரச்சந்தையில் திறந்தவெளியில் கூடாரம் அமைத்து கடை வைத்திருந்த வியாபாரிகள் அவதிக்கு ஆளாகினர். இதேபோல், பவானிசாகர் பகுதியிலும் மாலையில், அரை மணி நேரம் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது.

## ஆந்திர நாவல் பழம் விற்பனை விரும்பி வாங்கும் ஊட்டி மக்கள்

ஊட்டி: ஆந்திர மாநிலத்தில் விளையும் நாவல் பழம், ஊட்டியில், கிலோ, 300 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டம், ஊட்டி மார்க்கெட் சாலையில், தள்ளுவண்டியில் மாம்பழம், அத்திப்பழம், நாவல் உட்பட பழங்கள் குவியலாக வைத்து விற்கப்படுகின்றன. இதில், ஆந்திர மாநிலத்தில் விளையும் நாவல் பழங்கள் குவியலாக வைக்கப்பட்டு விற்கப்படுகிறது.

இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என, மூன்று சுவைகளை கொண்டுள்ள நாவல் மரத்தின் அனைத்து பாகங்களும் மருத்துவப் பயன்கள் கொண்டவை. நாவல் பழத்தில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, வைட்டமின் 'பி' போன்ற தாதுக்கள் இருப்பதால், ரத்தத்தை சுத்தப்படுத்தும்; இரும்புச் சத்தை அதிகரிக்கும். இதனால், ரத்தத்தின் கடினத் தன்மை மாறி இலகுவாகும் என்பது மருத்துவம் கூறும் தகவல்கள்.

இந்நிலையில், தள்ளுவண்டிக் கடைகளில் விற்கப்படும் நாவல் பழங்களை, மக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். வியாபாரி முபாரக் கூறுகையில், “நாவல் பழங்கள், ஆந்தி ராவில் இருந்து, நேரடியாக பெரு வியாபாரிகள் மூலம், கோவைக்கு எடுத்து வரப்படுகின்றன. அங்கிருந்து பழங்களை வாங்கி வந்து, கிலோ, 300 ரூபாய்க்கு விற்கிறோம்,” என்றார்.

## மகிழ்ச்சியில் விவசாயிகள்

மஞ்சூர் : மஞ்சூர் சுற்று வட்டாரத்தில், பெய்த மழையால், விவசாயிகள் \மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

நடப்பாண்டு துவக்கத்திலிருந்து எதிர்பார்த்த அளவு மழை இல்லை. தேயிலை தோட்டம், மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. சில இடங்களில் ஊற்றுநீர் உதவியுடன் மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழை வேண்டி பல்வேறு கிராமங்களில் சிறப்பு பூஜையும் நடத்தப்பட்டது. கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு, மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் சில பகுதிகளில் சில மணி நேரம் மட்டுமே மழை பெய்தது. இந்நிலையில் கடந்த சில நாட் களாக, அவ்வப்போது மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கான 'கிசான் சுவிதா' மொபைல் 'ஆப்ஸ்' அறிமுகம்

திண்டுக்கல்: 'கிசான் சுவிதா' எனும் புதிய மொபைல் ஆப்ஸ் விவசாயிகளுக்கு ஆலோசனை தகவல்களை வழங்க என தனியே அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த 'ஆப்ஸ்' விவசாயிகளுக்கு உதவும் வகையில் வடிவமைத்து அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் மண் பற்றிய தகவல்கள், ஊட்டச்சத்து மேலாண்மை, பயிர் மற்றும் பருவநிலைகள், நோய் எச்சரிக்கை, சந்தை விலைகள், விநியோகம், பயிர் உற்பத்தி, டீலர்கள் குறித்த தகவல்கள் மற்றும் அத்துடன் நிபுணர்களின் ஆலோசனைகள், முக்கிய தகவல்களை வழங்குகிறது.

மேலும், இதில் உள்ளூர் நிர்வாகம் எவ்வளவு தண்ணீர் திறந்துவிடுகிறது அது எப்போது நிலத்துக்கு வரும் என்கிற தகவல்களையும் பெறலாம் என்பது தனி சிறப்பு.

இந்த ஆப்ஸை பெற, 'பிளே ஸ்டோரில்' நுழைந்து 'கிசான் சுவிதா' எனும் மொபைல் 'ஆப்ஸ்'சினை பதிவிறக்கம் செய்து இன்ஸ்டால் செய்ய வேண்டும். அதில் விவசாயி தன்னுடைய பெயர், போன் நம்பரை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்ததும் அந்த ஆப்ஸில் விவசாயின் பெயர் தெரியும்.

இதில் நிலம், மண் வகை, வானிலை மற்றும் பயிர்களின் வகைகள் உள்ளிட்ட தகவல்கள் விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி வழியாக உள்ளூர் மொழியில் அனுப்பப்படும். இதன் மூலம் விவசாயிகள் தங்களுக்கு எழும் சந்தேகங்களையும் தெரிவித்து பதில் பெறலாம். இத்தனை வசதி இருந்தாலும் இதில் சில கவலைக்குரிய விஷயங்களும் உள்ளன.

'ஸ்மார்ட் போனில்' மட்டுமே இந்த ஆப்ஸ் இயங்கும். அடுத்து இந்த ஆப்ஸ்சில் <உள்ள தகவல்கள் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டும் இருப்பதால் தமிழ் மட்டுமே தெரிந்த விவசாயிகளுக்கு எந்தளவு பயனுள்ளதாக அமையும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

வேளாண் தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறுகையில்,

'ஸ்மார்ட் போனில் மட்டுமே இந்த செயலி இயங்கும் என்றாலும், இந்த ஆப்ஸ் பயனுள்ள பல தகவல்களை கொண்டுள்ளது. ஊரில் உள்ள படித்த இளைஞர்கள் தங்கள் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு இதன் மூலம் கிடைக்கும் தகவல்களை கொண்டு சேர்க்கலாம்',என்றார்.

## சாணார்பட்டியில் பெய்த மழையால் தீவன பற்றாக்குறைக்கு தீர்வு

சாணார்பட்டி: சாணார்பட்டி பகுதியில் பெய்த கோடை மழையால் கால்நடைகளின் தீவனங்களுக்கு தற்காலிக தீர்வு ஏற்பட்டுள்ளது.

நதத்ம் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் 70 சதவீதத்திற்கு மேல் 'ம' மற்றும் தென்னை சாகுபடி செய்துள்ளனர்.
இந்த விவசாயத்தில் சீசனுக்க மட்டுமே வேலை இருக்கும் என்தால் பெரும்பாலான

விவசாயிகள் மறும் தொழிலாளர்கள் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடை வளர்க்கும் தொழிலை அதிக அளவில் செய்கின்றனர். இப்பகுதியில் கடந்த சில ஆண்டுகளாகவே பருவமழை பெய்யாததால் விவசாயம் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டும் போதிய மழை பெய்யவில்லை.

இதனால் சோளத்தட்டை, வைக்கோல் போன்ற தீவனங்களின் உற்பத்தி குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டது. கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்ததால் கால்நடைகளை சொற்ப விலைக்கு விற்கும் நிலைக்கு கால்நடை வளர்ப்போர் தள்ளப்பட்டனர்.

கடந்த சில நாட்களாக கோபால்பட்டி, சாணார்பட்டி, கம்பிளியம்பட்டி, அஞ்சுகுளிப்பட்டி, எம்ககலாபுரம், கொசவபட்டி, விராலிப்பட்டி, தவசிமடை, வீரசின்னம்பட்டி, கன்னியாபுரம், ஆவிளிபட்டி, மருநூாத்து, மேட்டுப்பட்டி உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் கோடை மழை தொடர்ந்து பெய்தது. இப்பகுதியில் உள்ள வயல்வெளி, கண்மாய்கள், தரிசு நிலங்களில் புற்கள் தழைத்துள்ளன. இதனால் இப்பகுதியில் ஏற்பட்ட தீவனப்பற்றாக்குறை பிரச்னைக்கு தற்காலிக தீர்வு ஏற்பட்டுள்ளது.

## ஜூன் மாதத்திற்குள் 30 ஆயிரம் மண்மாதிரி அட்டை வழங்க உத்தரவு

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் கூடுதலாக 30 ஆயிரம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, முடிவுகளை ஜூன் மாதத்திற்குள் வழங்க வேளாண் இணை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கம் மண்வள அட்டை திட்டத்தை இந்தியா முழுவதும் கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்த ஆணையிட்டது. நாடு முழுவதும் தேசிய மண்வள அட்டை இயக்கம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் மூலம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண் வகை, மண்ணின் தன்மை, அதிலுள்ள சத்துக்களின் விவரங்கள் பட்டியலிடப்படுகின்றன. மேலும் அம்மண்ணில் என்ன பயிர் பயிரிடலாம் என்பதையும் பரிந்துரைக்கின்றனர்.

அதன்படி விவசாயி செயல்பட்டால் மண்ணின் தன்மை மாறி விளைச்சல் அதிகரிக்கும்.

திண்டுக்கல் இணை இயக்குநர் சம்பத்குமார் தெரிவித்ததாவது: 2017க்குள் மண் மாதிரிகளை ஆய்வு செய்து, அதன் தன்மையை ஜி.பி.எஸ்., மூலம் எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் கணினியில் பதிவு செய்ய உத்தரவிட்டனர்.

இதனடிப்படையில் திண்டுக்கல்லில் சென்ற ஆண்டு மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 10 ஆயிரத்து 540 மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளன.

மேலும் அனைத்து விவசாயிகளுக்கும் மண் வள அட்டை வழங்கும் வகையில் கூடுதலாக 30 ஆயிரம் மண் மாதிரிகள் ஆய்வு செய்து, முடிவுகளை இம்மாத இறுதிக்குள் வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளோம், என்றார்.

## செழித்து வளர்ந்து காணப்படும் தென்னை: அய்யம்பாளையம் விவசாயிகள் மகிழ்ச்சி

வேலாயுதம்பாளையம்: கரூர் அருகே, வேலாயுதம்பாளையம் செல்லும் வழியில் அய்யம்பாளையத்தில் கிணற்று நீர்ப்பாசனம் மூலம், தென்னை மரங்கள் செழித்து வளர்ந்து காணப்படுகிறது.

கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் செல்லும் வழியில் தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு பக்கமும் தென்னை மரங்கள் வளர்ந்து செழித்து காணப்படுகிறது. இப்பகுதியில் விளைவிக்கப்படும் தென்னையில் இருந்து கிடைக்கும் தென்னை மட்டைகள் கூரை வேய பயன்படுத்தவும், பாளைகள்

உரித்து கட்டவும், தேங்காய்களை மார்க்கெட்டில் கொண்டு சென்று விற்பனை செய்து விவசாயிகள் பலனடைகின்றனர். பலர் தேங்காய்களை உரித்து, அதை உடைத்து வெயிலில் உலர வைத்து கொப்பரையாக விற்பனை செய்கின்றனர்.

இதுகுறித்து அய்யம்பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயி செந்தூரான், 50, கூறியதாவது: வேலாயுதம்பாளையம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தென்னை சாகுபடி நன்றாக உள்ளது. தண்ணீர் பற்றாக்குறை தான் அதிகம். காவிரியில் தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் பரிதவிக்கின்றனர். இருந்தாலும் நீண்டகாலமாக வளர்த்து வந்த தென்னையை காப்பாற்ற போராடி வருகிறோம். எங்களுக்கு கிணற்றுப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர்ப்பாசனம் தான் கை கொடுத்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## கீழக்கரையில் மங்குஸ்தான் பழங்கள் விற்பனை ஜோர்

கீழக்கரை: குற்றாலத்தில் விளையும் சீசன் பழங்களில் ஒன்றான மங்குஸ்தான் பழம் கீழக்கரையில் விற்பனைக்கு வந்துள்ளது. மருத்துவ குணம் நிறைந்த மங்குஸ்தான் பழங்கள் கிலோ ரூ.220 க்கு விற்பனையாகிறது.

குற்றாலத்தை சேர்ந்த பழ வியாபாரி மசூத் கூறுகையில்,“ இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட இப்பழங்கள் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் காய்த்து குலுங்கும். உடலுக்கு குளிர்ச்சியையும், புத்துணர்வையும் கொடுக்கும் ஆற்றல் படைத்தது. இவற்றின் மகத்துவம் தெரிந்தவர்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். அதிக இனிப்பு சுவையுடன் ருசியாகவும் இருக்கும்,” என்றார்.

மலைப்பிரதேசங்களில் மட்டுமே விளையும் மங்குஸ்தான் பழங்களை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச்சென்றனர்.

## மீன்வளத்துறையில் ரூ.47.50கோடி வளர்ச்சி பணி: கலெக்டர் ஆய்வு

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்ட மீன்வளத்துறையில் ரூ.47.50 கோடி வளர்ச்சி பணிகளை கலெக்டர் ஆய்வு செய்தார்.

தமிழக மீன்வளத்துறை சார்பில் ராமநாதபுரம் மாவட்ட மீனவ கிராமங்களில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முகுந்தராயர்சத்திரம், தனுஷ்கோடி, தங்கச்சிமடம், பாம்பன், வேதாளை, டி.மாரியூர் ஆகிய கடலோர

கிராமங்களில் ரூ.44.70 கோடியில் மீன்பிடி இறங்கு தளங்கள் அமைக்க முதல்வர் ஜெயலலிதா 2015 ஜூலை 15ல் வீடியோ கான்பரசிங் மூலம் அடிக்கல் நாட்டினார். இதையடுத்து மீன்பிடி இறங்கு தள கட்டுமான பணிகள் துவங்கின.

இப்பணிகளை கலெக்டர் நடராஜன் நேற்று ஆய்வு செய்தார். தங்கச்சிமடத்தில் 63 சதவீதம், முகுந்தராயர்சத்திரத்தில் 68 சதவீதம், தனுஷ்கோடியில் 17 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளது. எஞ்சிய பணிகளை விரைந்து முடிக்க மீன்வளத்துறை அதிகாரிகளிடம் கலெக்டர் அறிவுறுத்தினார். மாநில சமச்சீர் நிதி திட்டத்தில் ரூ.99.70 லட்சத்தில் தங்கச்சிமடம் கடல் பகுதியில் மிதவை மீன் கூண்டு முறையில் கோபியா மீன் வளர்ப்பதை பார்வையிட்டார்.

கலெக்டர் அலுவலக வளாகத்தில் ரூ.1.80 கோடியில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த மீன்வளத்துறை கட்டட கட்டுமான பணியை பார்வையிட்டார். மீன்வளத்துறை துணை இயக்குனர் காசிநாத பாண்டின், உதவி இயக்குனர் கோபிநாத், உதவி செயற்பொறியாளர் தர்மராஜ் உடன் சென்றனர்.

## கொப்பரை தேங்காய் ஏலம்

ப.வேலூர்: ப.வேலூரில், கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. ப.வேலூர் தாலுகாவில் சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் தேங்காய்களை உடைத்து, அதன் பருப்புகள் வியாழக்கிழமை ப.வேலூர் வெங்கமேட்டில் உள்ள, சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக ஏலம் விடப்படுகிறது. நேற்று நடந்த ஏலத்தில், 1,460 கிலோ கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று, 50.11 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 48.89 ரூபாயக்கும், சராசரியாக, 49.41 ரூபாய்க்கும் பருப்புகள் ஏலம் போனது. கடந்த வாரத்தை விட, இந்த வாரம் கொப்பரை தேங்காயின் வரக்கு குறைவாக இருந்ததால், விலை உயர்வடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**சேலத்தில் 30.2 மி.மீ., மழை**

சேலம்: கெங்கவல்லி, ஏற்காடு உள்ளிட்ட பகுதிகளில், நேற்று, 30.2 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சேலம் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு, பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. குறிப்பாக, ஏற்காட்டில், 4.2 மி.மீ., கெங்கவல்லியில், 13.2, வீரகனூரில், 6, மேட்டூரில், 6.8 மி.மீ., என, சேலம் மாவட்டம் முழுவதும், 30.2 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கால்நடைகளுக்கு ஏற்படும் பறவை காய்ச்சலை தடுக்க ஈரோடு மாட்டுச்சந்தையில் மருந்து தெளிப்பு**

ஈரோடு, : கால்நடைகளுக்கு ஏற்படும் பறவை காய்ச்சலை தடுக்கும் வகையில் ஈரோடு மாட்டுச்சந்தையில் வாகனங்கள் மற்றும் கால்நடைகள் செல்லும் வகையில் தண்ணீரில் மருந்து தெளிக்கப்பட்டது.ஈரோடு கருங்கல்பாளையம் காவிரி செக்போஸ்ட் பகுதியில் வாரம்தோறும் வியாழக்கிழமை மாட்டுச்சந்தை நடைபெறுவது வழக்கம்.அதன்படி நேற்று காலை மாட்டுச்சந்தை நடந்தது.

மாடுகளை விற்பனை செய்வதற்காக விவசாயிகள் தமிழகத்தில் கம்பம், மதுரை, தேனி, கரூர், ஒட்டன்சத்திரம், திருப்பூர், கோவை, மேட்டுப்பாளையம், சேலம், ஆத்தூர், சங்ககிரி, எடப்பாடி மற்றும் ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து மாடுகளை கொண்டு வந்தனர். மாடுகளை வாங்கி செல்வதற்காக ஆந்திரா, கேரளா, கர்நாடகா, கோவா, தெலுங்கானா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் அதிக அளவில் வந்தனர். நேற்று நடந்த மாட்டு சந்தைக்கு 550 பசுமாடுகளும், 500 எருமைமாடுகளும், 350 வளர்ப்பு கன்றுகளும் கொண்டு வந்தனர்.

இதில் பசுமாடுகள் ரூ.16 ஆயிரம் முதல் 32 ஆயிரம் ரூபாய் வரையிலும்,

எருமைமாடுகள் ரூ.18 ஆயிரம் முதல் 34 ஆயிரம் ரூபாய் வரையிலும், வளர்ப்பு கன்றுகள் ஆயிரம் ரூபாய் முதல் 6 ஆயிரம் ரூபாய் வரையும் விலை கூறப்பட்டது. மாடுகள் விற்பனையும் அதிகமாக இருந்தது.

தற்போது கால்நடைகளுக்கு பறவை காய்ச்சல்நோய் பரவி வரும் நிலையில் இதை தடுக்கும் வகையில் வெளி மாநிலங்களில் இருந்து வரும் வாகனங்களுக்கு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இந்த மாட்டுச்சந்தைக்கு மாடுகளை ஏற்றி செல்வதற்காக வெளி மாநிலத்தில் இருந்து லாரிகள், வேன்கள் அதிக அளவில் வந்தது. இதன் மூலமாக நோய்கள் பரவாமல் தடுக்க மாட்டுச்சந்தையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வாகனங்கள் மற்றும் கால்நடைகள் செல்லும் பகுதியில் தண்ணீர் தேக்கப்பட்டு அதில் பறவை காய்ச்சல் தடுப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டது. தொடர்ந்து கால்நடைகளுக்கு பறவை காய்ச்சல் பராமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## புதுகை அருகே இயற்கை முறை உற்பத்தி துவரம் பருப்பு விற்பனை வாங்குவதில் மக்கள் ஆர்வம்

புதுக்கோட்டை : புதுகை அருகே இயற்கை முறையில் உற்பத்தி செய்து விற்கப்படும் துவரம் பருப்பு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. புதுகை அருகே செல்வநகரில் உள்ள கருவேப்பிலான் ரயில்வே கேட் பகுதியில் புதுகை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட துவரம்பருப்பு விற்பனை நடைபெற்று வருகின்றது.

இந்த துவரம் பருப்பானது இயற்கை முறையினை பின்பற்றி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகளால் பயிரிடப்பட்ட துவரையினை கொள்முதல் செய்து, அதனை இயற்கை முறையாக திருகையில் சுற்றி, கைகளால் தரம் பிரிக்கின்றனர். இதையடுத்து துவரம் பருப்பாக மாற்றிய பின்னர் பாக்கெட்டுகளில் அடைத்து பொதுமக்களுக்கு சில்லரை விற்பனையில் கொடுக்கப்படுகிறது. மேலும் மொத்தமாகவும் வியாபாரிகளுக்கு விற்கப்படுகின்றது.

ரேஷனில் துவரம் பருப்பு விநியோகம் செய்யப்பட்டாலும், விலை அதிகமுள்ள துவரம்பருப்பை வாங்குவதற்கு தயக்கம் காட்டும் பொதுமக்கள் குறைந்த

விலையில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுவதால், இந்த துவரம் பருப்பினை விரும்பி வாங்கி செல்கின்றனர்.

## அனைத்து பயிர்களிலும் அதிக மகசூல் பெற சாகுபடிக்கு முன் மண் பரிசோதனை அவசியம் வேளாண் அதிகாரி வழிகாட்டல்

சேதுபாவாசத்திரம், : நாம் பயிரிடும் அனைத்து வகை பயிர்களிலும் அதிக மகசூல் பெற சாகுபடிக்கு முன் மண் பரிசோதனை செய்வது அவசியம் என வேளாண் அதிகாரி அறிவுறுத்தியிருக்கிறார். இது குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சாந்தி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

மண்ணில் உள்ள பேரூட்ட சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை கணக்கிட்டு சமச்சீர் முறையில் உரமிடுவதற்கும், சிக்கன முறையில் உரமிட்டு உரச் செலவை குறைத்திடுவதற்கும், அதற்கேற்ப கண்மாய் வண்டல் அல்லது மணலிட்டு மண் நயத்தை மேம்படுத்துவதற்கும், மண் தரம் அறிந்து நுண்ணூட்ட உரமிடுவதற்கும், மண் ஆய்வு செய்வது அவசியமாகும். பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பு மண் ஆய்வு செய்திட வேண்டும். முக்கியமாக கோடை காலங்களில் பயிர் இல்லாத தருணத்தில் செய்வது சாலச்சிறந்தது.

மண் மாதிரிக்கு எரு குவிக்கப்பட்ட இடம், வரப்பு ஓரம், நடைபாதை, வயல் ஓரம், வாமடைப்பகுதி மற்றும் நீர் தேங்கும் பகுதிகளில் மண் எடுப்பதை தவிர்க்க வேண்டும். குறைந்தது ஒரு வயலில் 10 இடங்களில் மண் மாதிரி எடுக்க வேண்டும். எடுக்கும் இடங்களில் இருக்கும் இலை, தழைகளை எடுத்துவிட வேண்டும் மேல் மண்ணை அப்புறபடுத்தக் கூடாது. 22.5 செ.மீ (3/4 அடி) ஆழம் வரை ‘ஸ்’வடிவத்தில் குழி வெட்ட வேண்டும்.

குழியில் இரு ஓரங்களிலும் 2.5 செ.மீ(1 அங்குலம்) கனத்திற்கு மேலிருந்து கீழாக சுரண்டி வழித்து மண்ணை சேகரிக்க வேண்டும். இதற்கு அலுமினிய கரண்டி அல்லது மூங்கில் குச்சிகளை பயன்படுத்துவது நல்லது. சேகரித்த மண்ணை சுத்தமான சாக்கு அல்லது பிளாஸ்டிக்தாள் அல்லது சுத்தமான சிமெண்ட் தரையில் கொட்டி பெரிய கற்கள், வேர்கள் முதலியவற்றை நீக்கி விட்டு நன்கு கலக்கி பரப்ப வேண்டும். பரப்பிய மண்ணை நான்கு சம பாகங்களாக பிரிக்க வேண்டும். எதிர்

எதிர் பாகங்களை நீக்கி விட்டு மீதம் உள்ள இரண்டு பாகங்களை ஒன்று சேர்த்து கலக்கி மறுபடியும் நான்கு பாகங்களாக பிரிக்க வேண்டும். முதல் கடவை நீக்கபட்ட பாகங்களை விட்டுவிட்டு மற்ற எதிர்பாகங்களை நீக்க வேண்டும். மீதம் உள்ள இரண்டு பாகங்களையும் ஒன்று சேர்த்து ஏற்கனவே செய்தது மாதிரி அரைக்கிலோ மண் இருக்கும் வரை செய்ய வேண்டும்.

இதற்கு நான்கு "சமபாக முறை" அல்லது "கால் பங்கீட்டு முறை" என்று பெயர். நெல், சோளம், கம்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு 15 செ.மீ ஆழத்திலும், மிளகாய், பருத்தி, கரும்பு, வாழை, காய்கறிகள், மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கும், தென்னை மற்றும் மரப்பயிர்களுக்கும் 90 செ.மீ ஆழத்திலும், பழ மரங்களுக்கு 150-180 செ.மீ ஆழம் வரையிலும் புல் வகை பயிர்களுக்கு 10 செ.மீ ஆழத்திலும் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். களர், உவர் நிலங்களுக்கு தனித் தனியாக மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். மண் மாதிரியுடன் உழவரின் பெயர், கிராமம் மற்றும் முகவரி, சர்வே எண், முன்னர் பயிரிடப்பட்ட பயிரின் பெயர், அடுத்து பயிரிடப்போகும் பயிரின் பெயர் ஆகிய விபரங்கள் அடங்கிய மண் மாதிரி விபரத்தாளையும், மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் அந்த செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

## யூரியா உர பயன்பாட்டுக்கு மண் பரிசோதனை அவசியம் வேளாண் அதிகாரிகள் தகவல்

பழநி, : யூரியா உரப் பயன்பாட்டிற்கு மண் பரிசோதனை அவசியம் என வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விவசாயிகள் வாங்கும் யூரியா மூட்டைக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது. 1 மூட்டை யூரியாவின் விலை சுமார் ரூ.2,800 ஆகும். இதற்கு மத்திய அரசு மானியமாக ரூ.2,500 வழங்குகிறது. இதுபோக விவசாயிகள் சுமார் ரூ.300 மட்டும் செலுத்தி யூரியா உரம் பெற்று வருகின்றனர். விவசாயிகள் தங்கள் சாகுபடி பரப்பில் அளவிற்கு அதிகமாக உரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இதனால், அரசுக்கு இழப்பீடு ஏற்படுவதுடன் நிலமும் மாசடைகிறது. இதைத் தடுக்க குஜராத், கேரளா மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டுள்ள புதிய முறை

தற்போது தமிழகத்திலும் அமல்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி சிறு, குறு விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி தங்கள் வயல் அல்லது தோட்டத்தில் மண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இதற்குக் கட்டணமாக ரூ.20 செலுத்த வேண்டும். இதன் பின் வேளாண் துறையினர் மண் மாதிரியைப் பரிசோதனை செய்து அதிலுள்ள சத்துகள், தேவையான சத்துகள், யூரியா உரத்தின் தேவை ஆகியவை குறித்த பரிந்துரைகள் இடம் பெறும் உழவர் அட்டை வழங்கப்படும். விவசாயிகள் இதை வைத்து உரக்கடைகளில் உரம் வாங்கிக் கொள்ளலாம். சிறு, குறு விவசாயிகள் இந்த அட்டையைப் பெறுவதற்கு தங்களது புகைப்படம், சிட்டா, அடங்கல் நகலுடன் வேளாண் துறை அலுவலகத்தை அணுகலாம். இத்தகவலை வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மழைநீர் சேகரிப்பு



பொதுவாக நாட்டில் எல்லா வளர்ச்சிகளுக்கும் அரசை முழுக்காரணமாக சொன்னாலும், விவசாய வளர்ச்சிக்கு பருவமழைதான் முக்கிய காரண மாகும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. தமிழ் நாட்டின் விவசாயத்தை பொறுத்தமட்டில், தென்மேற்கு பருவமழையால் பெரிய பலன் கிடைத்து விடாவிட்டாலும், கர்நாடகாவில் பெய்யும் மழைதான் மேட்டூர் அணையை நிரப்புவதற்கு பேருதவி புரிகிறது. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டால்தான், காவிரி டெல்டா மாவட்டங்களான 6 மாவட்டங்களில் இப்போது குறுவை சாகுபடியும், பிறகு சம்பா சாகுபடியும் செய்யமுடியும். மேட்டூர் அணை 1934–ம் ஆண்டு கட்டப்பட்டதாகும். ஒவ்வொரு ஆண்டும் குறுவை சாகுபடிக்காக ஜூன் 12–ந் தேதி மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டு, காவிரியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். காவிரியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் அதேநேரத்தில், விவசாயிகளின் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி குறுவை சாகுபடியை தொடங்குவார்கள். 1934–ம் ஆண்டு முதல் இன்றுவரை ஜூன் 12–ந் தேதி சரியாக மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது 15 முறைதான். 11 முறைகள் ஜூன் 12–ந் தேதிக்கு முன்பே திறந்துவிடப்பட்டிருக்கிறது. 54 முறைகள் ஜூன் 12–ந் தேதிக்கு பிறகே தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. மேட்டூர்அணை தண்ணீரை நம்பி 16 லட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதியை பெறுகிறது.

டெல்டா மாவட்டங்களில் பொதுவாக 4 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் குறுவை சாகுபடி செய்வது வழக்கம். இந்த ஆண்டும் தென்மேற்கு பருவமழை பெய்வது தாமதமாகிக்கொண்டிருப்பதால், 12–ந் தேதி நிச்சயமாக மேட்டூர் அணை திறப்பதற்கு வாய்ப்பு இல்லை. கேரளாவில் தென்மேற்கு பருவமழை கடந்த 1–ந் தேதி பெய்யத் தொடங்கினால் தான் அப்படியே நகர்ந்து கர்நாடகாவில் தீவிரமடைந்து, அங்கு மழைபெய்து கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பி, அங்கிருந்து மேட்டூருக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டு, மேட்டூர் அணை நிரம்பி அதன்பிறகு தான் காவிரிக்கு தண்ணீர் ஓடிவரும். இப்போது தென்மேற்கு பருவமழை தாமதமாக, இன்னும் 4 அல்லது 5 நாட்களில்தான் கேரளாவில் பெய்யத் தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. எனவே, எப்போது மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரும் என்று உறுதியாக தெரியாத நிலையில்,

குறுவை சாகுபடியை செய்யமுடியாமல் போய்விடுமோ? என்று விவசாயிகள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடந்த ஆண்டும் இதேபோன்ற நிலைமை ஏற்பட்ட நேரத்தில், 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் வயல்பரப்பில் நிலத்தடிநீர் மூலம் பாசனவசதி அதாவது, மோட்டார் பம்பு செட்டுகளை பயன்படுத்தி நிலத்தடிநீரை எடுத்து விவசாயம் செய்ய வாய்ப்புள்ள விவசாயிகள் சாகுபடி செய்தார்கள். ஆனால், அப்போது தொடர்ந்து மின்சாரம் சப்ளை இல்லாததால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆனால், இந்த ஆண்டு நிலத்தடிநீர் மூலம் குறுவை சாகுபடியை செய்ய நினைக்கும் விவசாயிகளுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில், முதல்–அமைச்சர் ஜெயலலிதா சில அறிவிப்பு களை வெளியிட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். அதிலும் குறிப்பாக, 12 மணிநேரம் விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு நிச்சயமாக விவசாயிகளுக்கு பெரிதும் உதவும். இதுபோல, நடவுப்பணியை நடவு எந்திரம் மூலம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் மானியம், நெல் நுண்ணூட்ட கலவை 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும். விதை மானியமாக ஏக்கருக்கு 1,400 ரூபாய் வழங்கப்படும் என்பது போன்ற பல அறிவிப்புகள் விவசாயி களுக்கு நிச்சயமாக ஆபத்பாந்த வனாக விளங்குகிறது. ஆனால், ஆண்டுதோறும் பருவ மழை இந்தகாலத்தில் உறுதியாக பெய்யும் என்று சொல்லமுடியாத நிலையில், எதிர்காலத்தில் நிலத்தடிநீர் பயன்படுத்தும் அவசியம் டெல்டா மாவட்டங்களில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளுக்கு அடிக்கடி ஏற்படும் என்ற வகையில், நிலத்தடிநீர் சேமிப்பு திட்டங்களில் அரசும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். விவசாயிகள், பொதுமக்கள் என்று எல்லோரும் தீவிர கவனம் செலுத்தவேண்டும். தற்போது சற்று தொய்வாக இருக்கும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை வீடுகளில் மட்டுமல்லாமல், விவசாயத்திற்கும் முழுவீச்சில் தீவிரப்படுத்தவேண்டும்.